# குளுனி வித்யா நிகேதன் மேல்நிலைப்பள்ளி

## தமிழ் இலக்கிய மன்றம்
## 2025-2026

## தமிழ் இலக்கிய மன்றம்

## கூட்டறிக்கை (2025-2026)

" எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ்

என்று சங்கே முழங்கு "

தமிழ் இலக்கிய மன்றம் மாணவர்களின் மொழி மற்றும் இலக்கிய திறனை வளர்க்கவும், உயர்த்தவும், மேம்படுத்தவும் வேண்டும் என்ற உயரிய உன்னத நோக்கத்தைக் கொண்டுள்ளது.

செம்மொழியாம் தமிழ் மொழியில் மிக்க ஆர்வமுள்ள மாணவர்கள் மன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தங்களது கருத்துக்கள் மற்றும் கற்பனைத் திறன்களைப் பல்வேற இலக்கிய வடிவங்கள் மூலமாக சுதந்திரமாக வெளிப்படுத்தவும் ஊக்குவிக்கவும் தமிழ் இலக்கிய மன்றம் உற்றத் துணையாக விளங்கும்.

மன்றத்தின் முக்கிய நோக்கங்கள்:

* மாணவர்களின் மொழித்திறனையும், இலக்கிய திறனையும் மேம்படுத்துதல்.

* மாணவர்களை சிறந்த சொற்பொழிவாளராக எழுத்தாளராக ஊக்குவித்தல். மற்றும் அவர்களின் அறிவார்ந்த சுதந்திரமான சிந்தனை திறனை வெளிப்படுத்த செய்தல்.

*தன்னம்பிக்கை உணர்வைத் தூண்டுதல் என்பதாகும் தொடர்ந்து தமிழ் இலக்கிய மன்ற கூட்டத்தின் திட்டங்களைச் செயல்படுத்துவது குறித்து தீர்மானிக்கப்பட்டது.

முதற்கட்ட நடவடிக்கையாக மன்றத் தலைவர் அருட்சகோதரி மரிய தெரஸ் அவர்களின் வழிகாட்டலின் கீழ் மன்ற ஒருங்கிணைப்பாளராக திருமதி.ராதிகா மற்றும் பொறுப்பாளராக திருமதி சாந்தி அவர்களையும் கொண்டு ஜூன் மாதம் 20-ஆம் தேதி 2025 அன்று அதிகாரப்பூர்வ மற்ற சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

இலக்கிய மன்ற கூட்டம் திருமதி சாந்தி அவர்களின் இறை



வழிபாட்டுடன் துவங்கியது. தொடர்ந்து திருமதி ராதிகா அவர்கள் வரவேற்புரை வழங்கினார். மன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து மன்றத்தின் செயலாளராக செல்வி ஜனனி ( பத்தாம் வகுப்பு இ பிரிவு ) அவர்களை ஒரு மனதாக தேர்ந்தெடுத்தனர்.

நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக மன்ற ஒருங்கிணைப்பாளர் திருமதி ராதிகா அவர்கள் 2025-26 - ஆம் ஆண்டு நடைமுறை திட்டங்களான.



"உரை முழக்கம் செழிக்க செய்வீர் " என்ற மன்றத்திற்கான கருப்பொருளை அறிவித்தார்.

தமிழ் இலக்கிய மன்றத்தின் நோக்கம் மற்றும் திட்டங்களை செயல்படுத்துவதற்கான கலந்துரையாடலையும் மேற்கொண்டனர்.



கலந்துரையாடலின் அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகள் முடிவெடுக்கப்பட்டன.

| வ.எ ண் | மாதம் | வகுப்பு | செயல்பாடுகள் |
|---|---|---|---|
| 1 | ஜூலை | 7&89&10 | திருக்குறள் கதைகள் கூறுதல் |
| 2 | ஆகஸ்ட் | 7&8&9&10 | பாத்திரமேற்று நடித்தல் |
| 3 | அக்டோபர் | 7&8&9&10 | வினாடி வினா ( பொது அறிவு ) |
| 4 | நவம்பர் | 7&8&9&10 | பட்டிமன்றம் |
| 5 | டிசம்பர் | 7&8 &9&10 | பேச்சுப்போட்டி |
| 6 | ஜனவரி | 7& 8 &9&10 | சிறுமலர் தயாரித்தல் |
| 7 | பிப்ரவரி | 7&8&9&10 | காலை வழிபாட்டுக் கூட்டம் |

மொழிப் புலமையையும், ஆளுமையையும் உருவாக்கி அகிலப் போற்ற வாழ செய்யும் அற்புதமாகும்.

இறுதியாக புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றச் செயலாளர் செல்வி **ஜனனி** அவர்களின் நன்றி உரையுடன் அதிகாரப்பூர்வமற்ற சந்திப்பு இனிதே நிறைவு பெற்றது.

Janani .N
செயலாளர் கையொப்பம்

R. Rathiya
ஒருங்கிணைப்பாளர் கையொப்பம்

முதல்வர் கையொப்பம்

சிறப்பு விருந்தினர் கையொப்பம்

# தமிழ் இலக்கிய மன்றம்

## இரண்டாவது செயல்பாட்டு அறிக்கை

ஆகஸ்ட் 22 தேதி 2025 நடைபெற்றது. பாத்திரம் ஏற்று நடித்தல் என்னும் தலைப்பில் 7 முதல் 10 பத்தாம் வகுப்பு மாணவர்கள் பங்கேற்றனர்.



22 ஆகஸ்ட் 2025 ம் தேதி தமிழ் இலக்கிய மன்ற உறுப்பினர்கள் அனைவரும் 7 - E வகுப்பில் ஒன்று கூடினர். சிறப்பு விருந்தினராக தமிழ் ஆசிரியை திருமதி கவிதா அவர்கள் மாணவர்களின் திறன்களை மதிப்பிடுபவராக பங்கேற்றார். இந்நிகழ்வின் இறை வணக்கத்தை விஷ்ணுவினி (8 A) மற்றும் வரவேற்புரையை ஓவியா ஸ்ரீ (8 D) வழங்கினர்.



இந்த நிகழ்ச்சியில் மாணவர்கள் தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புகழ்பெற்ற கதாபாத்திரங்களை உயிரோட்டமாக வடிவமைத்து நடித்தனர். சிலர் பாரதி, பாரதிதாசன், அவ்வையார், கம்பர், வேலு நாச்சியார் போன்ற சிறந்த கதாபாத்திரங்களை அழகாக நடித்து,தங்கள் நடிப்புத் திறமையை வெளிப்படுத்தினர்.

இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம் மாணவர்களின் படைப்பாற்றல், தன்னம்பிக்கை மற்றும் தமிழ் இலக்கியம் மீதான அன்பை வளர்ப்பதாகும். மாணவர்கள் தங்கள் நடிப்பின் மூலம் கதாபாத்திரங்களின் தனித்தன்மையையும், நெறிமுறைகளையும் வெளிப்படுத்தினர்.



சிறப்பு விருந்தினர், சிறப்பாக நடித்த மாணவர்களைப் பாராட்டினார். இந்த நிகழ்வு மாணவர்களுக்கு தமிழ் இலக்கிய பாத்திரங்களை நெருக்கமாக அறிந்து கொள்ளும் ஒரு அரிய வாய்ப்பாக அமைந்தது. இதன் மூலம் தமிழ் இலக்கியத்தின் பெருமையை உணர்ந்து கொண்டனர். இறுதியில் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவுற்றது.

R. Rathiga
ஒருங்கிணைப்பாளர் கையொப்பம்

முதல்வரின் கையொப்பம்

**<u>தமிழ் இலக்கிய மன்றம்</u>**

**<u>முதல் கூட்ட செயல்பாடு (2025-26)</u>**




தமிழ் இலக்கியத்தின் முதல் கூட்ட செயல்பாடு ஜூலை 30-ம் தேதி 2025 நடைபெற்றது. திருக்குறள் கதைகள் கூறுதல் என்னும் தலைப்பில் 7 முதல் 10 பத்தாம் வகுப்பு மாணவர்கள் பங்கேற்றனர்.



30 ஜூலை 2025-ம் தேதி தமிழ் இலக்கிய மன்ற உறுப்பினர்கள் அனைவரும் 7 - E வகுப்பில் ஒன்று கூடினர். சிறப்பு விருந்தினராக தமிழ் ஆசிரியர் திரு. ஜான்பிரிட்டோ அவர்கள் மாணவர்களின் திறன்களை மதிப்பிடுவதற்காக பங்கேற்றார். இந்நிகழ்வில் இறை வணக்கத்தை தர்ஷினி (7-B) மற்றும் வரவேற்புரை லிஷாலினி (8-A) வழங்கினர்.

இந்த நிகழ்ச்சியில் மாணவர்கள் இந்த இலக்கிய மன்றக் கூட்டத்தில் சிறப்பு மிக்க திருக்குறளையும் அதனை சார்ந்த கதைகளையும் கூறி மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.



இந்நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம் மாணவர்களின் படைப்பாற்றல், தன்னம்பிக்கை மற்றும் தமிழ் இலக்கியம் மீதான அன்பை வளர்ப்பதாகும். மாணவர்கள் தங்கள் பேச்சாற்றல் மூலம் திருக்குறளின் பெருமையை வெளிப்படுத்தினர்.

சிறப்பு விருந்தினர், சிறப்பாக திருக்குறள் கதை கூறின மாணவர்களை ஊக்குவித்து பாராட்டினார். அனைத்து தமிழ் இலக்கிய மன்ற மாணவர்களையும் உற்சாகப்படுத்தும் வகையில் சிறப்புரையாற்றி நிகழ்ச்சியை இனிதே நிறைவுற செய்தார். இறுதியில் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவுற்றது.

R. Rathiga

ஒருங்கிணைப்பாளர் கையொப்பம்

30/04/25

முதல்வர் கையொப்பம்